# கல்லூரி வரலாறு

திருவண்ணாமலை மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் சிறப்பான இடத்தினைப் பெற்று முத்திரைப் பதித்துக் கொண்டிருக்கிற சிறந்த கல்லூரி, இன்றைக்கு ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உயர்கல்வியினைச் செவ்வனே வழங்கி வருகிறது. இங்குப் பட்டம் பெறுகின்ற மாணவர்களுள் பலர் முதல் வகுப்பிலும் சிலர் பல்கலைக்கழக அளவில் முதல் தர மதிப்பெண்ணையும் பெற்று பெருமை சேர்த்து வருகின்றனர். இப்படி பல சிறப்புகளைத் தன்னகத்தே பெற்றுள்ள இக்கல்லூரி தனக்கென ஒரு நீண்ட பாரம்பரியத்தையும், தனித்த வரலாற்றையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பின்தங்கிய, இப்பகுதியில் இன்று பலருக்கு அறிவுக்கண் திறக்கும் அறிவுத் திருக்கோயிலாகக் கலை அறிவியல் கல்லூரியாக உயர்ந்து நிற்கும் இக்கல்லூரி, அன்று பலருக்கு வேலை வழங்கும் தொழிற்சாலையாகத் தொடங்கப்பட்டது. 42 ஆண்டுகளுக்கு முன்பு 1972ஆம் ஆண்டில் கலசபாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்த திரு. எஸ். முருகையன் அவர்களை திருவண்ணாமலையில் வணிகப் பெருமக்கள் அனைவரும் சென்று, சந்தித்து நம் நகரில் வேளாண்மை மட்டுமல்லாது தொழிற்சாலை ஒன்றினையும் உருவாக்க வேண்டும். அதில் தங்களுடைய பங்களிப்பும் மேலான ஒத்துழைப்பும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அன்றைய தினமே திரு. எஸ். முருகையன் அவர்களுடன், திரு. S.நரசிம்ம முதலியார், திரு.V.B.S. மணி முதலியார், திரு. T.D.கோவிந்தசாமி ரெட்டியார், திரு. M.கோதண்டராம ரெட்டியார், திரு. R.ரகுபதி செட்டியார் திரு. M.சின்னராஜ், திரு. T.நடராஜன், திரு. T.A.சண்முகம், திரு. A.T.P. சண்முகம், திரு.T.K.D. அண்ணாமலை முதலியார், திரு. P.K.துரைசாமி ரெட்டியார், திரு.N.எத்திராஜ் செட்டியார், திரு.K.R.S.மாணிக்கம் முதலியார், திரு. T.K.பிச்சன் செட்டியார், திரு. A.N.ஏகாம்பரம், திரு. A.ஆறுமுக நயினார், திரு. M.நடராஜ செட்டியார், திரு. S.D.R.சந்தான செட்டியார் ஆகிய 19 பங்குதாரர்களைக் கொண்ட நிறுவனமாக, "சண்முகா தொழிற்சாலை" என்ற பெயரில் தொடங்கப்பட்டது. அந்நிறுவனத்திற்கு திரு. S.நரசிம்ம முதலியார் தலைவராகவும், திரு. T.K.பிச்சன் செட்டியார் செயலாளராகவும், திரு.T.K.D.அண்ணாமலை முதலியார் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

சிறிது காலத்திலேயே சுமார் 15 ஏக்கர் நிலத்தில் 900 சதுர அடியில் முதன்முதலாக 'கருப்புக் கல்' பளபளப்பு செய்யும் தொழிற்சாலை திரு. T.A.சண்முகம் அவர்கள் தலைமையில், திரு. எஸ். முருகையன் அவர்கள் முன்னிலையில், அன்றைய தொழிற்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு. S.மாதவன் அவர்கள் திறந்து வைத்துப் பெருமை சேர்த்தார். இவ்வாறு சிறிய அளவில் தொடங்கிய தொழிற்சாலை பின்பு வளர்ந்து "கண்டசாரி சர்க்கரை ஆலை" ஒன்று புதியதாக தொடங்கப்பட்டு, அதன்பின்னர் 'சந்தன எண்ணெய் ஆலையினையும்' தொடங்கிச் சிறப்பாக நடத்தப்பெற்று வந்த நிலையில் 'காகிதத் தொழிற்சாலை' சண்முகா தொழிற்சாலையினால் நிறுவப்பட்டு திறம்பட நடத்தப்பெற்று வந்தது. மிகப்பெரிய தொழிற்சாலை நிறுவனமாக வளர்ந்துகொண்டு இருந்தபோதே, ஆழ்ந்த சமூக அக்கறையுடன் திருவண்ணாமலை மாவட்டத்தின் கல்வி பற்றாக்குறையை அறிந்து மிகப்பெரிய பொருட்செலவில் சண்முகா தொழிற்சாலை உயர்நிலைப் பள்ளி 25.08.1975ல் அமைத்து கொடுக்கப்பட்டது.

அதன்பின்னர் பங்குதாரர்களின் வயது காரணமாகவும், சிலர் தெய்வநிலை அடைந்த காரணத்தாலும் அப்போது பாராளுமன்ற உறுப்பினராகவும், பங்குதாரராகவும் இருந்த திரு. எஸ்.முருகையன் அவர்கள் முன்னிலையில் அனைத்து பங்குதாரர்களும் ஒன்றுகூடி இந்நகரில் நிலைத்த செல்வமாகிய உயர்கல்வியினைப் பெறுவதற்கு மாணவ, மாணவிகள் வெளி மாவட்டங்களுக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது என விவாதித்துத் தரமான கல்விக் கூடத்தினை இந்நகருக்கு உருவாக்கலாம் என்று முடிவு செய்ததின் அடிப்படையில் இக்கல்வி நிறுவனத்தைச் 'சண்முகா தொழிற்சாலை கல்வி அறக்கட்டளை' மூலம் தொடங்கினார்கள். கல்லூரியின் தலைவராகத் திரு. S.நரசிம்ம முதலியார் அவர்களும், செயலர் மற்றும் தாளாளராகத் திரு. எஸ். முருகையன் Ex. M.P. அவர்களும், பொருளாளராகத் திரு. M.சின்னராஜ் அவர்களும், துணைத் தலைவராக திரு. T.A.சண்முகம் அவர்களும், இணைச் செயலாளராகத் திரு.A.T.P.சண்முகம் அவர்களும் பொறுப்பேற்றுக் கொள்ள முடிவு செய்து சுமார் 10.74 ஏக்கர் நிலத்தினைக் கல்வி அறக்கட்டளைக்கு வழங்கியும் தொடங்கினார்கள்.

இந்நிலையில் ஆலோசனைகளைப் பெறவும், பொருளாதார நெருக்கடியினைச் சமாளிக்கவும் நகரில் பரந்த மனப்பான்மையோடும், பொதுநல நோக்குடனும் செயல்பட்டு வந்த இன்னும் பல வணிகப் பெருமக்களை அறக்கட்டளை இயக்குநர்களாக இணைக்க முடிவு செய்து திருமதி. அமராவதி முருகையன், திருமதி. ராதாபாய் நரசிம்ம முதலியார், திருமதி. கஸ்தூரி சண்முகம், திருமதி. பிரேமா சின்ராஜ், திரு.எஸ்.கார்த்திகேயன், திருமதி. மணிமொழி முத்துசாமி, திருமதி. குமுதா அருணகிரி, திரு.பி.ராமச்சந்திர உபாத்யாயா, திரு. B.சண்முகசுந்தரம், திரு. A.பாலசுப்பிரமணியன், திரு.P.N.K.இராஜேந்திரன், திரு. பி.கே.துரைசாமி அவர்களுக்கு பதிலாக திரு. எல்.விஜய்ஆனந்த், திரு.எஸ்.டி.ஆர்.சந்தானம் செட்டியார் அவருக்கு பதிலாக திரு. எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு,

திரு.ஆறுமுகம் நயினார் அவர்களுக்கு பதிலாக திரு. அருணாச்சலம், திரு. டி.கே.டி.அண்ணாமலை அவர்களுக்கு பதிலாக திரு.டி.கே.டி.ஏ. கணேசன் உள்ளிட்ட 30 பேர் கொண்ட அறக்கட்டளையினை உருவாக்கி 19.09.1996ஆம் தேதிய அரசாணை (G.O.Ms. 666 Education Science & Technology (ZI) Dept.-ன்படி 1996ஆம் ஆண்டு சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டது. பேராசிரியர் வ.வெங்கடேசன் அவர்கள் கல்லூரி ஆரம்பம் முதல் 2003ம் ஆண்டு வரை கல்வி ஆலோசகராகப் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

இளநிலைப் பட்டப்படிப்பில் பி.எஸ்சி, பயோ-கெமிஸ்ட்ரி, மைக்ரோ பயாலஜி, எலக்ட்ரானிக்ஸ் சயின்ஸ், கம்ப்யூட்டர் சயின்ஸ், பி.காம்., ஆகிய பாடப்பிரிவுகளில் மாணவர்களைச் சேர்க்க அரசும், சென்னை பல்கலைக்கழகமும் 1996ஆம் ஆண்டிலேயே அனுமதி வழங்கினாலும், அறக்கட்டளை இயக்குநர்களின் ஆலோசனையின் அடிப்படையிலும், கல்வியாளர்களின் வழிகாட்டுதலின்பேரிலும் 1997-98ஆம் கல்வியாண்டிலிருந்து மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2000-2001ல் பி.சி.ஏ. பாடப்பிரிவுக்கு மாணவர்களைச் சேர்க்க அனுமதி பெறப்பட்டது. மேலாண்மைக்குழு உறுப்பினர்களின் தொடர் முயற்சியின் அடிப்படையில், புதுதில்லியில் உள்ள அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி நிர்வாகக்குழு (AICTE, New Delhi - Vide No. TN-79/ET-MCA/2000) 2001-2002ஆம் கல்வியாண்டில் எம்சிஏ பாடப்பிரிவில் மாணவர்களைச் சேர்க்க அனுமதி வழங்கியது. 2002-2003ம் ஆண்டில் தகவலமைப்பு மேலாண்மையியல் (BISM) பாடப்பிரிவு கல்லூரியில் தொடங்கப்பட்டது. அதன்பின்னர் முதுநிலை பட்டப்படிப்பாகத் தகவல் தொழில் நுட்பவியல் (M.Sc., IT) தொடங்கப்பட்டது.

தொடக்கத்தில் சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்த இக்கல்லூரி 2003-2004ல் புதியதாகத் தொடங்கப்பட்ட திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு பி.எஸ்சி கணிதத்திலும், எம்.காம் பாடப்பிரிவிலும் மாணவர்களைச் சேர்க்க அனுமதியும் பெறப்பட்டது. 2004-2005ஆம் ஆண்டில் பி.எஸ்சி, இயற்பியலும் 2006-2007ம் கல்வியாண்டில் எம்.எஸ்சி கணிதவியல் பாடப்பிரிவுக்கும் அனுமதி பெறப்பட்டது. 2007-2008ம் ஆண்டில் பி.எஸ்சி பயோ டெக்னாலஜி பாடப்பிரிவும், 2008-09ம் ஆண்டில் பிஏ ஆங்கிலம், பி.ஏ தமிழ், பிபிஏ ஆகிய பாடப்பிரிவுகளும், 2009-10ம் ஆண்டில் பிஎஸ்சி சாப்டுவேர் கம்ப்யூட்டர் சயின்ஸ், பி.காம் பைனான்ஸ் & அக்கவுண்ட்ஸ், பி.காம் கணினி பயன்பாட்டியல் ஆகிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பெற்றன. 2011-12ல் பி.எஸ்சி, வேதியியல் பாடப்பிரிவு தொடங்கப்பெற்றது.

2012-2013ல் எம்.எஸ்சி இயற்பியல் பாடப்பிரிவு தொடங்கப்பெற்றது.

2013-2014ஆம் கல்வியாண்டில் எம்.ஏ தமிழ், எம்.எஸ்சி நுண்ணுயிரியல், எம்.எஸ்சி. கணினி அறிவியில் பாடப்பிரிவுகளும், ஆராய்ச்சி படிப்பில் எம்.ஃபில் ஆங்கிலம், இயற்பியல் ஆகிய படிப்புகளும் தொடங்கப்பெற்றன.

2014-2015ம் கல்வியாண்டில் பி.எஸ்சி கணிதம், இயற்பியல், வேதியியல் கூடுதல் பாடப்பிரிவுகளும், எம்.எஸ்சி வேதியியல் பாடப்பிரிவு தொடங்கப்பட்டன.

2016-2017ம் கல்வியாண்டில் ஆராய்ச்சிப் படிப்புகளாக எம்.பில்., தமிழ், நுண்ணுயிரியல் படிப்புகளும், முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்புகளாக வணிகவியலும், நுண்ணுயிரியலும் தொடங்கப்படவுள்ளன.

தொடக்கத்தில் ஐந்து பாடப்பிரிவுகளுடன் தொடங்கிய இக்கல்லூரி இன்று 17 இளநிலைப் பட்டப்படிப்புகளையும் (UG) 9 முதுநிலை பட்டப் படிப்புகளையும் (PG), 5 ஆராய்ச்சிப் படிப்புகளையும் (M.Phil) மற்றும் 2 முனைவர் (Ph.D) ஆராய்ச்சிப் படிப்புகளையும் தன்னகத்தே பெற்று, பெரிய அளவில் வளர்ந்துள்ளது. கல்லூரியின் வளர்ச்சியிலும், மாணவர்களின் முன்னேற்றத்திலும், கல்லூரி தொடங்கப்பட்டதிலிருந்தே தொடர்ந்து பணியாற்றி வருகின்ற பேராசிரிய பெருமக்களும், அலுவலகப் பணியாளர்களும் பெரும் பங்காற்றி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அருகுபோல் வேரூன்றி இக்கல்லூரி இன்று ஆல்போல் தழைத்து மலை நகருக்கு அணிகலனாய் அழகு சேர்த்து வருகிறது.

இவ்வாண்டில் நமது கல்லூரி இந்திய பல்கலைக்கழக மானியக் குழுவின் **2F விதியின்கீழ் பட்டியலிடப்பட்ட கல்லூரியாக அங்கீகாரம்** பெற்றுள்ளது.

மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை வளர்க்கும் வகையில் தனியே பயிற்சி வகுப்பும், ஆங்கில நாளிதழும் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

நாள்தோறும் வளர்ச்சியைக் கண்டு வந்துள்ள சண்முகா தொழிற்சாலை தற்போது இரண்டு தலைமுறைகளைக் கடந்து மூன்றாவது தலைமுறையாக சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியாகச் சமுதாய பணியாற்றி வருவது பாராட்டுக்குரியது. கல்லூரி உருவெடுத்து 19 ஆண்டுகளை முழுமையாக முடித்து 20ஆம் ஆண்டில் இயங்கிக் கொண்டிருக்கும் இக்கல்லூரியின் தற்போதைய தலைவராக திரு. **ராமச்சந்திர உபாயத்தியாயா** அவர்களும், செயலர் மற்றும் தாளாளராக திரு. **எஸ்.கார்த்திகேயன்,** எம்.காம். அவர்களும், பொருளாளராக **S.D.R.S. பாபு** அவர்களும் பொறுப்பேற்றுச் சிறப்பாக வழிநடத்தி வருகிறார்கள்.